# முரசொலி

பக்கங்கள் நான்கு | விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 252 ஆங்கீரச ஆடி 30 (14.08.1992) வெள்ளி


### ★ தாண்டிக்குளம் தடைமுகாமில் அனுமதிச்செய்தி எழுதுமாறு படையினர் உத்தரவு

வவுனியா தாண்டிக்குளம் ஊடாகச் செல்லும் வடபகுதி பயணிகள் கண்ணிவெடியில் இறந்த படை அதிகாரிகளுக்கு அனுதாபச் செய்தி எழுதுமாறு அங்குள்ள இராணுவத்தினர் உத்தரவிடுகின்றனர். இதற்காக தாண்டிக்குளம் தடை முகாமில் அனுதாபப் புத்தகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் பயணிகள் அனுதாபச் செய்தி எழுதிவிட்டு செல்வதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (47)

# புலிகள் மீதான இந்தியாவின் தடை நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டது

## புலிகள் டில்லியில் வழக்கு தாக்கல் விசாரணை 25 ஆம் திகதி

விடுதலைப்புலிகள் மீது இந்திய அரசு விதித்த தடையை எதிர்த்து புதுடில்லி நீதிமன்றத்தில் புலிகள் நேற்றுமுன்தினம் மனுத்தாக்கல் செய்துள்ளனர்; இதனால் புலிகள் மீதான தடை இன்று அமுலுக்கு வருவதை டில்லி நீதிமன்ற நீதிபதி சி. என். நாத் ஒத்திவைத்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள சட்ட விரோத நடவடிக்கையை தடைசெய்யும் நீதிமன்றில் புலிகளின் சர்வதேச அலுவலகத்தின் பிரமுகர் லோரன்ஸ் திலகர் பெயரில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனுவில் புலிகளை தடைசெய்ய சட்டரீதியான உரிமை இந்தியாவுக்கு இல்லை இத்தடையை நடைமுறைப் படுத்தவும் அதற்கு உரிமை இல்லை புலிகள் இயக்கம் இந்தியாவிலுள்ள ஓர் அமைப் பல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

... 4 ஆம் பக்கம் பார்க்க

## ★ கிராம மக்கள் சாட்சி
## மட்டக்களப்பு படுகொலையை இராணுவமே நடத்தியது

கடந்த ஞாயிறன்று மட்டக்களப்பில் நடைபெற்ற படுகொலையில் சிக்கிய மேலும் 9 தமிழ் மக்களின் சடலங்கள் நேற்று கண்டெடுக்கப்பட்டன.

இப் படுகொலையில் 50 தமிழர்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இந்த படுகொலைக்கு முஸ்லிம் கும்பலே காரணம் என இராணுவம் கூறுகின்ற போதும் இக்கொலையை இராணுவமே நடத்தியதாக இப்பகுதி மக்கள் தெரிவித்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இராணுவ முகாம் ஒன்றிலிருந்து சாதாரண உடை அணிந்து வந்த இராணுவத்தினரே படுகொலையை புரிந்ததாக நேரில் பார்த்த மக்கள் மட்டக்களப்பு நீதிபதியிடம் முறையிட்டதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

9 இராணுவ உயரதிகாரிகளின் மரணத்துக்கு பழிவாங்க

... 4 ஆம் பக்கம் பார்க்க

## ★ செய்தியாளர் மாநாட்டில் ரணில்
## கனத்தை வன்முறைகள் திட்டமிடப்பட்டு நடைபெற்றது

கனத்தையில் கடந்த திங்கள் புதன்கிழமைகளில் இடம்பெற்ற வன்முறைகள் திட்டமிட்ட (சிலரால்) நடத்தப்பட்டது என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் காடையர் கூட்டம் மரண ஊர்வலத்துடனோ, துக்கம் அனுஷ்டித்தவர்களுடனோ வரவில்லை அவர்கள் தாமாகவே உள்ளே வந்தனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அங்கு நின்றவர்கள் சில எதிர்க்கட்சிப் பிரமுகர்களின் பெயர்களை சொல்லிக் கோஷமிட்டனர் அதில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பெயரும் அடங்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த திங்கள், புதன்கிழமைகளில் கொழும்பில் இராணுவ அதிகாரிகளின் மரண சடங்குகள் திட்டமிட்ட குழு ஒன்றினால் குழப்பப்பட்ட

... 4 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ - கடற்படை குழுவும் அராலி சம்பவத்தை விசாரிக்கும்

அராலியில் இடம்பெற்ற கண்ணி வெடிச்சம்பவத்தை விசாரணை நடத்த இராணுவ கடற்படை கூட்டு விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அமைத்துள்ள தனிநபர் விசாரணைக் குழுவுக்கு புறம்பாக இந்த கூட்டு விசாரணைக் குழு செயற்படும் என இராணுவப் பேச்சாளர் சேனக சரத் முனசிங்க நேற்று தெரிவித்தார்.

## ★ இராணுவ பேச்சாளர் சொல்கிறார்
## இராணுவ நடவடிக்கைக்கு அதிகாரிகள் திட்டமிடவில்லை

வடக்கு கிழக்குப் பகுதியில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது உயர் இராணுவ அதிகாரிகளின் மறைவு இராணுவ நடவடிக்கைகளை எவ்விதத்திலும் பாதிக்காது என இராணுவப் பேச்சாளர் சேனக சரத் முனசிங்க நேற்று தெரிவித்தார்.

இம் மாதம் 10 ஆம் திகதி வடக்கில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க இருந்த படை அதிகாரிகள் திட்டமிட்டு இருந்ததாக வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## கண்ணிவெடி சம்பவ இடம் வரைபடம்மூலம் விளக்கம்

அராலி சந்தியில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் சேனக சரத் முனசிங்க செய்தியாளருக்கு விளக்கமளித்தார்:

வரைபடங்கள் மூலம் கண்ணிவெடி வெடித்த இடத்தையும் அதிகாரிகளின் வாகனம் சென்ற பாதையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்ணிவெடி இடம்பெற்ற இடம் யாழ் பெரு நிலப்பரப்பின் மிக அருகில் இருந்ததையும் ரூபவாஹினி ஒளிபரப்பியது

## விசாரணைக்குழு பொதுமக்கள்விவரமும்கோருகிறது

அராலி கண்ணிவெடிச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு பொதுமக்களிடமிருந்தும் விபரங்கள் கோரியுள்ளது.

விவரங்களை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்புமாறும் பின்னர் நடைபெறும் பொது விசாரணையின் போது சாட்சியமளிக்க நேரில் சமூகம் தரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ● அசம்பாவிதங்களுக்கு பொறுப்பேற்று
# பாதுகாப்பு அமைச்சரை ராஜினாமாச் செய்ய சுதந்திரக்கட்சி எம். பி. ராஜபக்ஷ கோரிக்கை

காலஞ்சென்ற லெப்டினட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணச்சடங்குகள் நடைபெற்ற நாளை துக்கதினமாக பிரகடனப்படுத்தாமை பற்றி மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர் என சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்

அசம்பாவிதங்களுக்கு பொறுப்பேற்று பாதுகாப்பு அமைச்சர் இராஜினாமாச் செய்யவேண்டுமெனவும் அவர் கூறினார்.

நிபுணர்கள் குழு ஊர்காவற்றுறைக்குச் சென்று இக்குண்டு வெடிப்பு சம்பந்தமாக விசாரணைகளை நடத்த முன்னரே முன்பே வைக்கப்பட்ட அமுக்க கண்ணிவெடியில் சிக்கி படையினர் மரணமடைந்ததாக எப்படிக் கூறமுடியும்

... 4 ஆம் பக்கம் பார்க்க

### தரையின் உறைதான் தரம்மிகுந்த தாவரங்கள்

# வடக்கிற்கு ஜெரி; கிழக்கிற்கு லக்கி இராணுவத்தளபதிகளாக நியமனம்

வடபிராந்திய புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

யாழ். மாவட்டத் தளபதியாக பிரிகேடியர் றோஹண தளுவத்த நிரந்தரமாக நியமிக்கப்படவுள்ளார்.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இடத்திற்கு முதலாமவரும் விஜய விமலரத்னவின் இடத்திற்கு இரண்டாமவரும் நியமனமாகின்றனர்.

கிழக்குப் பிராந்திய தளபதியாக பிரிகேடியர் லக்கி ஹத்தமுல்ல நியமிக்கப்படவுள்ளார்.

இவர் தற்போது கூட்டுப்படைத் தலைமையகத்தில் இராணுவ நடவடிக்கைப் பிரிவு அதிகாரியாகக் கடமையாற்றுகிறார்.

மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்த்தப்பட்டு இவர் கிழக்குப் பிராந்தியத்திற்கு நியமிக்கப்படுவார் எனத் தெரியவருகிறது.

ஜெரி சில்வா தற்போது கிழக்குப் பிராந்திய தளபதியாகக் கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடு அவர்களுக்கே சொந்தமாகும்

## - அமைச்சர் தொண்டா

அடுத்த வருடத்திற்குள் தோட்டத் தொழிலாளர்கள் தற்பொழுது குடியிருக்கும் வீடும், காணியும் அவர்களுக்கே சொந்தமாகும் என அமைச்சர் தொண்டமான் பண்டாரவளையில் உறுதி கூறியுள்ளார்.

'எனக்கு இம்மாதம் 30 ஆம் திகதி 80 வயது பூர்த்தியாகிறது. அடுத்த பிறந்த நாளுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடும், காணியும் அவர்களுக்கே சொந்தமாவதற்கு வழிவகை செய்வேன்' எனவும் அவர் அங்கு கூறினார்.

# வாசுகியை பிணையில் விட நீதிபதி உத்தரவு

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த வாசுகியை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு விசேட நீதிமன்றத்தின் மேலதிக நீதிபதி எம். சௌந்தர பாண்டியன் உத்தரவிட்டார்.

வாசுகி தாக்கல் செய்த மனு மீது தீர்ப்பளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

ராஜீவ் காந்தி மற்றும் பதினைந்து பேர் கொலையில் சந்தேக நபராக கருதப்படும் குண்டு சாந்தனுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டு மட்டும் வாசுகியை தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்க போதிய காரணமாகக் கொள்ள முடியாது என்றும் நீதிபதி தமது தீர்ப்பில் கூறினார்.

# பாதிக்கப்பட்ட பாடசாலைக்கு தளபாட உதவி!

இடம்பெயர்ந்துள்ள ஆலியவளை இ.சி.த.க. வித்தியாலயத்திற்கு வடமராட்சி பேரூர் நிறுவனம் ஒரு தொகுதி தளபாடங்களையும் பாடசாலை உபகரணங்களையும் வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி பாடசாலை கடந்த வருடம் நடைபெற்ற வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து செம்பியன் பற்றில் தற்போது தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் சுமார் 500 மாணவர்கள் கல்வி கற்கின்ற போதிலும் சுமார் 100 மாணவர்களுக்கு போதுமான அளவே தளபாட வசதி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (24)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தென்பகுதியினருக்கு நஷ்டஈடு!

கடந்த ஜூன் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு நஷ்டஈடு வழங்கவென ஜனாதிபதி வெள்ள நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி 40 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தெற்கில் ஒன்பது மாவட்டங்களில் வதியும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிதி பகிர்ந்து வழங்கப்படவுள்ளது.

குறித்த ஒன்பது மாவட்டங்களிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளின் தொகைக்கேற்ப இந்நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

# தொடர் போட்டி முடிவுகள்

உரும்பிராய் சாந்திஜீ விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியில் ஓர் அங்கமாக நேற்று முன் தினம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஒன்றில் உதயசூரியன் அணி வளர்மதி விளையாட்டுக்கழக அணியை 4க்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் வென்றது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இன்னொரு போட்டியில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய பாரதி விளையாட்டுக் கழக அணியை 5:1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது. 16

## இன்றைய போட்டிகள்

அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டித்தொடரில் நேற்று முன்தினம் குருநகர் விளையாட்டுமைதானத்தில் இடம்பெற்ற முதல் ஆட்டத்தில் தொடர்மாடி விளையாட்டுக் கழக 'பி' பிரிவு அணியை சொய்சா தோட்டம் சுவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இரண்டாவது ஆட்டத்தில் கொழும்புத்துறை பொற்பதி அணி அதனை எதிர்த்தாடிய குருநகர் பாடுமீன் 'பி' பிரிவு விளையாட்டுக் கழக அணியை 1;0 என்ற கோல் அடிப்படையில் வென்றது.

இ போட்டித் தொடரில் இன்று அரியாலை விளையாட்டுக்கழக 'பி' பிரிவு அணியை எதிர்த்து ஜோன் கெனடி அணியும் ஜெறுசலேம் வி.க அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக அணியும் மோதும். (16)

# விவசாயிகளுக்கு மண்ணெண்ணை

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் தமது பகுதியிலுள்ள க.பொ.த உயர்தரம், க.பொ.த சாதாரணதரம் படிக்கும் மாணவர்களுக்கும், இப்பிரதேசத்தில் உள்ள சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் தலா இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் மேலதிகமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்துடன் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் மேலதிகமாக இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

பங்கீட்டு அட்டைக்கு தலா ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

இத்துடன் விவசாயிகளுக்கு 15 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது (24)


## 2 ஆம் ஆண்டுநினைவு அஞ்சலி

தோற்றம் 24-12-59 மறைவு 7-08-90

அமரர்

### வஸ்தியாம்பிள்ளை வரததாசன்

(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

திதி: 14-08-92

இதயத்தின் ஒளிவிளக்கே!
குடும்பத்தின் குலவிளக்கே!
ஈராண்டு சென்றாலும்
உம் நினைவு என்றும் மாறாது!

23, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்
08021

உமது பிரிவால் துயருறும்
மனைவி
வ நிர்மலா


# நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் 1992

## மகோற்சவங்களின் தொடக்கமும் முடிவும்

மகோற்சவங்கள் ஒரு கால விசேடத்தை அடிப்படையாகக் கொண்டே அதன் தொடக்கமோ, முடிவோ, இரண்டுமோ இருப்பது வழக்கம்.

1. உத்தராயணம்:- மனிதருடைய ஒரு வருடம் தேவர்களுக்கு ஒருநாள் தை முதல் ஆனி முடிய உள்ள ஆறு மாத காலம் தேவர்க்குப் பகலாகவும் ஆடி முதல் மார்கழி முடிய உள்ள ஆறுமாத காலம் இரவாகவும் இருக்கும் தை முதல் ஆனிவரையுள்ள காலம் உத்தராயணம் எனப்படும்.

இக் காலத்தில் பிண்டத்தில் (உடலில்) உள்ள பிராணவாயு வல நாடியிலிருந்து இட நாடிக்கு மாறுங்காலம் என்பர்.

2 தெட்சணாயணம்:- இக்காலம் தேவர்க்கு இரவு. இக் காலத்திலே பிராணவாயு இட நாடியிலிருந்து வல நாடிக்கு மாறும் என்பர்.

3 அமாவாசை: பிராணவாயு நடு நாடியாகிய சுழுமுனையில் சேருங்காலம்.

4 பூரணை: ஞானப்பிரகாசம் தெளிவு நினைவாகாது மாயப்படுங்காலம்

5 சூரியகிரகணம்: பிராணவாயு சூரிய நாடியாகிய வல நாடியில் நின்றும் உந்தியின் கீழ் இரண்டு அங்குலம் சர்ப்பவடிவாகிய குண்டலினி சத்தியில் பொருந்துங் காலம்.

6 சந்திரகிரகணம்: பிராணவாயு இட நாடியில் நின்றும் உந்திக்கு இரண்டங்குலம் கீழ் முன் சொன்ன சத்தியில் பொருந்தும் காலம்

இவற்றுள் ஏதாவது ஒன்றை அடிப்படையாகக் கொண்டு மகோற்சவங்கள் குறித்த தினத்தில் தொடங்கிக் குறித்த தினத்தில் முடியும் எனக் கூறுவர்.

(ஆதாரம்: சைவசமய சிந்தாமணி)

## இன்றைய தெய்வீக இசையரங்கு

### சிறிமுருகன் தண்ணீர்ப் பந்தல்

மாலை - 6.00 - இரவு 8.00

| பாட்டு | வயலின் | மிருதங்கம் |
| --- | --- | --- |
| கனகாம்பரி பத்மநாதன் | எல் கோபிதாஸ் | கே. கண்ணதாசன் |

# தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆளுநருடன் அவசர பேச்சு

இம்மாதம் ஐந்தாம் திகதி புதன்கிழமை தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங்கை ஆளுநர் மாளிகையில் சந்தித்து பேசியுள்ளார்.

சுமார் அரைமணி நேரத்துக்கு மேலாக இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தை பற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை

வழமையாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் தவிர்த்து இரவு எட்டு மணிக்கு முதல்வர் ஜெயலலிதா ஆளுநர் மாளிகைக்கு சென்றதும் உதவியாளர்கள் எவருமின்றி இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியதும் சென்னை வட்டாரங்களில் பல வதந்திகளை கிளப்பியதாக தெரிகிறது

தமது அ.தி.மு.க கட்சிக்காரர்களுக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது பற்றி முதல்வர் ஜெயலலிதா கவலை கொண்டிருப்பதாகவும் இவை பற்றி அவர் ஆளுநருடன் விவாதித்திருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகிறது.

இவற்றின் காரணமாக ஜெயலலிதா தமது முதல்வர் பதவியை இராஜிநாமா செய்ய முன்வந்தார் என்ற வதந்திகளும் அடிப்பட்டன. ஆனால் எல்லாமே வழமை போல உள்ளதாக தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# அலம்பில் பகுதியில் இராணுவ நடவடிக்கையாம்

முல்லைத்தீவில் உள்ள அலம்பில் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# பொலிஸாரின் உறவினர் 54 பேர் பஞ்சாப்பில் 4 தினங்களில் கொலை!

பஞ்சாப்பில் நேற்றும் தீவிரவாதிகளால் இரு பொலிஸ் அதிகாரிகளின் உறவினர்கள் ஏழு பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் உறவினர்களைப் பழிவாங்கும் செயலை நிறுத்துமாறு முதலமைச்சர் பீன்ட்சிங் கோரியுள்ளார்.

கடந்த 4 தினங்களில் பொலிஸாரின் உறவினர்களில் 54 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

## முனைப்புடன் முன்னெடுக்கப்படவேண்டிய

# சூழலும் அபிவிருத்தியும்

சூழல் பாதுகாப்பு, சூழல் அபிவிருத்தி என்று சூழல் சுற்றாடல் தொடர்பாக அண்மைக் காலங்களில் உலக நாடுகளும் மக்களும் அதிக அளவு அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளனர்.

இவ்வருடம் ஜூன் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் பிரேசிலின் றியோ டி ஜெனேரோ நகரில் ஐக்கிய நாடுகள் 'சூழலும் அபிவிருத்தியும்' என்ற மாநாடு நடைபெற்றது. ஜூன் பன்னிரண்டாம் திகதி முதல் நடந்த உச்சி மாநாட்டில் உலக நாடுகள் சகலவற்றின் தலைவர்களும் பங்குபற்றினர்.

சூழல் பாதுகாப்பு, அபிவிருத்திசம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் இந்த உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. இதன் மூலம் இந்த விடயங்களுக்கு எந்த அளவுக்கு உலக நாடுகள் முக்கியத்துவம் கொடுக்கின்றன என்பதை புரிந்து கொள்ளலாம்.

இந்த மாநாடு முக்கியமாக வளர்ந்து விட்ட நாடுகள், வளரும்நாடுகள், வளர்ச்சி குன்றிய நாடுகள் என்பனவற்றுக்கிடையே சூழல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி வளங்களை ஏற்படுத்துவதையே நோக்கமாக கொண்டிருந்தது.

ஆகவே இது நாடுகளுக்கிடையே சூழல் மற்றும் வளர்ச்சி தொடர்பான உறவு முறைகளை மையப்படுத்திய மாநாடு எனலாம். உண்மையில் மனித நடவடிக்கைகளை இயற்கை நியதிகளுடன் எவ்வாறு இணக்கம் செய்யலாம் என்பதே சூழல் பாதுகாப்பின் அடிப்படைக் கரு என்பதைக் கவனிக்க வேண்டும்.

தனி மனிதனையோ, குடும்பத்தையோ அல்லது அவனும் அவர்களும் வாழ்கின்றபகுதியின் சூழல் எவ்வாறு பாதிக்கிறது அவன் வேலை செய்யும் அலுவலகம், தொழிற்சாலை அல்லது நிறுவனம் எவ்வாறு பாதிக்கிறது என்பனவையே பரந்த அடிப்படையில் சூழல் நிலையாகக் கொள்ளவேண்டும்.

மனிதன் வாழ்கின்ற அல்லது போக்குவரத்துச் செய்கின்ற வீதியின் தூசுகள் அவனைக் கடுமையாகப் பாதிக்கின்றன. வீதியருகேயும் வீட்டுக்கருகேயும் உள்ள சாக்கடைகள் மக்களைப் பாதிக்கின்றன. வேகமாக ஓடி புழுதியையும் கிளப்பி புகையையும் வெளியேற்றும் வாகனங்களும் மனிதனின் சூழலைப் பாதிக்கின்றன.

ஆகவே மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கையும் அவனது சூழலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனித வாழ்க்கைக்கு சமூக நடவடிக்கைகளும் தேவைதான் எனினும் அவற்றின் தாக்கங்கள்

**எஸ். ஜி. எம்**

ஏற்படுத்தும் பாதிப்புகளைக் குறைப்பதே சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் இலக்கும், குறிக்கோளும் ஆகும்.

பூமி உஷ்ண மடைதல், தட்பவெப்ப நிலையில் ஏற்படும் மாற்றம், ஓசோன் படலத்தில் ஏற்படும் கிறேக்கள் என்ற விடயங்களே மிக முக்கியமாக உலகெல்லாம் பேசப்படுகின்றன.

தட்பவெப்ப நிலை மாற்றத்திற்கும் பூமி உஷ்ண மாவதற்கும் உலக அளவில் காடுகள் பரவலாக அழிக்கப்பட்டு வருவது முக்கிய காரணமாக கணிக்கப்பட்டுள்ளது, எனவே காடுகளை அழிக்கக் கூடாது. அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்து "றியோ" மாநாட்டில் மேலோங்கி நின்றது.

றியோ மாநாடு நடைபெறாவிட்டாலும் கூட சூழல், சுற்றுப்புறம் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சி மனித சமூகத்தில் ஏற்பட்டுத்தான் வந்தது.

அதனால் காடு வளர்ப்பு, நீர் நிலைகள் பேணல் என்ற விடயங்களுக்கு இப்போது எமது மண்ணில் ஓரளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பன மாநகரை, காடு வளர்ப்பு, நீர் நிலைகள் பேணல் கிடங்களில் கவனம் செலுத்துகின்ற நிறுவனங்களில் முதன்மை வகிக்கின்றன.

காடுவளர்ப்புத்தான் சூழல் பாதுகாப்பு அல்ல, என்றாலும் அது சூழல் பாதுகாப்பின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும், எனவே இங்கு காணவர்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து கொள்வது மிகவும் அவசியமம்.

காடு வளர்ப்பு என்பது தமிழர்க்குப் புதிதான ஒன்றல்ல, அரை நூற்றாண்டு முன்பே பாரதியார் "காகியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்" என்று பாடியுள்ளார்.

இயற்கை வள அழிவுகளினால் பல நாடுகளில் பாரிய மாற்றங்களும், சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

எதியோப்பியாவின் ஆவாஷ் வான காடுகள் அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட பிரதேசத்தின் அறுபது சதவீதப் பரப்பில் பருத்தியும், இருபத்திரண்டு சதவீத பரப்பில் கரும்பும் பயிரப்பட்டன.

இதனால் காடுகளோடு இணைந்து வாழ்ந்த மக்கள் வறுமைக்கும், பஞ்சத்துக்கும் ஆளாக்கப்பட்டனர். பணப்பயிரான பருத்திக்கு உணவு பயிர்களைக் கைவிட்டதும் பஞ்சத்துக்குக் காரணமாயிற்று.

இதேபோல் பங்களாதேஷில் காடுகள் அழிக்கப்பட்டதால் மழை நீரைத் தடுக்கும் பாதுகாக்க இயற்கையாகவே இருந்த அரண் அழிக்கப்பட்டது. இதன் விளைவு பங்களாதேஷின் மூன்றில் இரண்டு பங்கு வெள்ளத்தில் மூழ்கியது.

இந்த இரண்டு நாட்டு உதாரணங்களும் மனித இனத்திற்கு ஒரு பாடமாக எடுத்துக்கொள்ளலாம். எனவே நாம் இனியும் காலந் தாழ்த்தாது, அக்கறையின்றி இராது மாநாட்டை நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கவேண்டியது அவசியம்

---

## இராணுவ அதிகாரிகளின் சேவை பிரமாணங்களில் மாற்றம்

இராணுவத்தில் அதிகாரிகள் தரத்திலானவர்களுக்கான சேவைப் பிரமாணங்களை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இது குறித்து சமர்ப்பித்துள்ள சிபார்சினை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

இராணுவத்தின் தற்போதைய தேவைகளுக்கு அமைவாக பழைய விதிமுறைகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு இராணுவ அதிகாரிகளுக்கான சேவைப் பிரமாணங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தில் இணைந்து கொள்ளுவதற்கான ஆர்வத்தை இளைஞர்கள் மத்தியில் உண்டாக்கும் வகையில் புதிய சேவை நிபந்தனைகள் பல சலுகைகளையுடையதாக அமைக்கப்பட்டிருக்கலாமென அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

## நல்லதொரு தீர்வை தெரிவுக்குழு சமர்ப்பிக்குமெனரணில் நம்பிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி மங்கள முனசிங்க தலைமையிலான தெரிவுக்குழு சமீபகாலத்தில் அடிக்கடி கூடித் தீர்வு யோசனை குறித்து ஆராய்ந்து வரும் இவ்வேளையில் அமைச்சரவைப் பேச்சாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவுக்குழு நல்லதொரு தீர்வைத் தருமென நம்பிக்கை வெளியிட்டுள்ளார்

"இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆக்கபூர்வமான யோசனை ஒன்றைச் சமர்ப்பிக்கும் என நம்புகின்றேன்"

இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மன் முனையில் பிரதேச செயலகம் ஒன்றினைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## சான்றிதழ் வழங்கும் பணி பருத்தித்துறையில் துரித கதியில்

பருத்தித்துறை பெரும்பாக காணி பதிவகத்தில் தற்போது சகல வேலைகளும் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

1991 ஆம் ஆண்டு ஆடி மாதத்துக்கு முன்னர் இக்காணி பதிவகத்தில் ஒப்படைக்கப்பட்ட உறுதிகளின் பதிவுகள் யாவும் நிறைவேற்றப்பட்டுவிட்டன

1990, 1991, 1992 ஆம் ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறப்பு, இறப்பு விவாக விண்ணப்பங்களுக்குரிய சான்றிதழ்கள் அனைத்தும் வழங்கப்பட்டு விட்டன.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் பிறப்பு, இறப்பு, விவாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து இது வரையும் குறித்த சான்றிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை பெரும்பாக காணிப் பதிவக மேலதிக மாவட்டப் பதிவாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை, கடவுச்சீட்டு வெளிநாட்டுத் தேவை தவிர்ந்த ஏனைய அவசிய தேவைகட்கு பிறப்புச் சான்றிதழ்கள் ஒரு தினங்களில் இங்கு வழங்கப்பட்டுவருகின்றன. 10

## பதவியேற்காத அதிபர்களின் இடத்திற்கு புதியவர்கள் நியமனம்

1988 இல் நடைபெற்ற அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பதவி உயர்வு பெற்று இதுவரை கடமையைப் பொறுப்பேற்காதுள்ள அதிபர்களின் இடத்துக்குப் புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இப் பரீட்சையில் தோற்றி இவர்களுக்கு அடுத்தபடியாக புள்ளி அடிப்படையில் முன்னணியில் உள்ளவர்களைக் கொண்டு இப் பதவிகள் நிரப்பப்படவேண்டும் என இலங்கை கல்விச்சேவை முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 12

## சேவையின்போதே பட்டதாரிகளாக ஆசிரியர்களுக்கு விரைவில் வசதி

ஆசிரிய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது உயர் கல்வியை தொடர்வதற்கு உரிய வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தமுகமாக தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருவதாக இதன் பணிப்பாளர்களில் ஒருவரான கே சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

தொலைக்கல்வியினடிப்படையில் ஆசிரியர்கள் தமது சேவையின் போது பட்டதாரிப்பட்ட நெறிகளையும், கல்விமாணி, முதுமாணி நெறிகளையும் தேசிய கல்வி நிறுவனத்தினூடாக கற்கும் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார் 12

## அமைச்சர்கள் கூரே, ரணிலுக்கும் கனத்தை கலவரத்தில் காயம்

கடந்த புதன்கிழமைமாலை நடைபெற்ற விஜய குமாரதுங்கவின் மரணச் சடங்கின் போது ஏற்பட்ட கலவரத்தின் போது மேலும் சில அமைச்சர்களும் காயமுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான சிறிசேன கூரே, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை பொலிசாரின் கடும் காவலையும் மீறி கும்பல் கல்லெறிந்து தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது

அரசாங்க வாகனங்கள் தாக்கப்பட்டதுடன் ஒரு தனியார் பஸ்ஸும் தீக்கிரையாக்கப்பட்டது.

புகைப்படக்காரர்களின் கமராக்களையும் கலகக் கும்பல் பறித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது

இதற்கிடையே கொழும்பு மேயர் ரணசிங்க பிரேமதாசவும் மற்றொரு அமைச்சரும் மருத்துவமனைக்குக்கொண்டு செல்ல வேண்டிய அளவுக்கு காயமுற்றதாக மற்றொரு ஏஜென்சிச் செய்தி தெரிவிக்கிறது.

---

★ இராணுவ இலட்சினையுடன் சுவரொட்டிகள்

# அரசுக்கு எதிரான செயற்பாடு

# ராணுவத்துக்குள்ளும் ஊடுருவல்!

அராலித்துறைப் பகுதியில் கொப்பேகடுவ உள்ளிட்ட பல உயர் இராணுவ அதிகாரிகள் விடுதலைப்புலிகளினால் கொல்லப்பட்டுள்ளதையடுத்து இராணுவத்தின் ஒரு பிரிவினருக்குள்ளும் அரச எதிர்ப்பு அலைகள் எழுந்துள்ளதாக புலனாய்வுப் பகுதியினர் சந்தேகம் கொள்வதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

★ வெளிநாட்டுத் தலைவர்கள் இறந்த சில சந்தர்ப்பங்களில் இங்கு தேசியக்கொடியை பல தினங்கள் அரைக்கம்பத்தில் பறக்கவிட்டு தேசிய துக்கதினம் அனுஷ்டித்த அரசு, சிங்கள மக்களுக்கும் அரசுக்கும் விசுவாசமாக செயற்பட்ட இவ் உயர் அதிகாரிகளுக்கு தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கத் தவறியமை

★ தேசிய வீரர்களுக்குரிய கௌரவத்தை வழங்கி இவர்களின் இறுதிக் கிரியைகளை சுதந்திர சதுக்கத்தில் நடாத்த முன்வராமை,

★ இந்த படை உயரதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறியமை ஆகிய முக்கிய காரணிகளே இராணுவத்தின் மத்தியில் அரச விரோத உணர்வினைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான அரச விரோத சுவரொட்டிகள் இதனை ஊர்ஜிதப்படுத்துவதாக அமைந்துள்ளன.

இந்த சுவரொட்டிகள் அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன 'நம் படைத்தலைவர்களைக் காக்க, அவர்களுக்கு உரிய இறுதி மரியாதையை செலுத்தத் தவறிய அரசு எப்படி இங்ஙனம் மக்களைக் காக்கப் போகிறது? என்ற சாரப்பட இச்சுவரொட்டிகள் எழுதப்பட்டுள்ளன இந்த சுவரொட்டிகளில் இராணுவ இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளமையே இவ் விடயத்தில் முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது

சுவரொட்டியுடன் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை அரசின் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பொலிஸார் தடியடி பொரளையில் 13 பேர் காயம்

மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகள் கடந்த திங்களன்று கனத்தை பொது மயானத்தில் நடைபெற்ற போது பொரளையில் இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து பொலிஸார் நடத்திய தடியடி கண்ணீர்ப்புகை பிரயோகத்தினால் சுமார் பதின்மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரி அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறுதிச்சடங்குகள் முடிந்தும் கனத்தையை விட்டு வெளியேறிய பொதுமக்களில் ஒரு பகுதியினர் பொரளைச் சந்தியில் கலவரம் விளைவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. 47

# வன்முறைக்காரரை கண்டஇடத்தில் சுட உத்தரவு

ஜெனரல் கொப்பேகடுவ உட்பட ஒன்பது படை அதிகாரிகள் கண்ணிவெடியில் சிக்கி கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து தெற்கில் வன்முறைகளைத் தூண்டும் விதத்தில் ஜே.வி.பியினர் நடந்து கொண்டால் உடன் சுடுமாறு பொலிஸாருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

தெற்கில் உள்ள சில அரசாங்க தனியார் கட்டடங்களுக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது. 47

# மலையகப் பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

கடந்த சனிக்கிழமை கண்ணிவெடி தாக்குதலில் படை அதிகாரிகள் மரணமான சம்பவத்தையடுத்து மலையகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மலையகத்தில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளும்படி ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவிடம் கேட்டுள்ளார். 47

# பிரப்பமடு இராணுவமுகாம் இடமாற்றப்பட்டது

வவுனியா பிரப்பமடு இராணுவ முகாம் கைவிடப்பட்டுள்ளது. இது மகாகச்சைகொடி என்ற இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து பிரப்பமடுவில் குடியேறியிருந்த 250 சிங்களவர்களும் புதிய இடத்துக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி பிரப்பமடு முகாமிலிருந்து வந்த இராணுவ ரோந்து அணி புலிகளால் தாக்கப்பட்டு 15 படையினர் பலியானதும், ஆயுதங்கள் பல மீட்கப்பட்டதும், பவள் கவசவாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டு பின் அழிக்கப்பட்டதும் நினைவிருக்கலாம்.

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளிவாரிப் பரீட்சைப் பகுதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. எனவே கலைமுதல் தேர்வு / வர்த்தக முதற் தேர்வுக்குரிய மாணவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டைகளை 17 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரையும் வெளிவாரிப் பரீட்சைப் பகுதியில் தங்களது பரீட்சைக்குரிய அடையாள அட்டைகளைக் காண்பித்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர்

08023

---

## ● செய்தியாளர் மாநாட்டில் முனசிங்க
# புலிகளின் ஷெல்லுக்கு அஞ்சியே அதிகாரிகள் ஒரே வாகனத்தில் பயணம்

தீவுப்பகுதியில் இராணுவ வாகன நடமாட்டத்தைக் கண்டால் தீவின் மறுபக்கத்தில் உள்ள விடுதலைப்புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்துவது வழமை இதனால் படை அதிகாரிகள் அனைவரும் ஒரே வாகனத்தில் ஏறி பாதுகாப்புக்கருதி சென்றிருக்கலாம் என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இராணுவப்பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

கொப்பேகடுவவும், விஜய விமலரட்னவுமே அனைவரும் ஒரே வாகனத்தில் செல்லும் முடிவை எடுத்தனர் எனவும் முனசிங்க அப்போது தெரிவித்தார்.

லைகாலத்திற்கு முன்பாக இந்த கண்ணிவெடி புதைக்கப்பட்டிருக்கலாம் என இராணுவம் பொறியியலாளர்கள் கருதுவதாக குறிப்பிட்ட முனசிங்க கடந்த 1991ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தீவுப்பகுதிக்கு வந்த இராணுவம் வீதி முழுவதும் அங்குலமாக கண்ணிவெடிகளை பரிசோதிப்பது முடியாத காரியம் என கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## ● அமைச்சர் செல்லச்சாமி சொல்கிறார்,
# தொண்டாவின் திட்டத்தை ஏற்றிருந்தால் அதிகாரிகள் கொலையை தடுத்திருக்கலாம்

ஜெனரல் கொப்பேகடுவவும் ஏனைய படை அதிகாரிகளும் கண்ணி வெடியில் மரணமானது புரையோடிக் கொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது.

இவ்வாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி டிக்கோயா நுவரெலியா தோட்டத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைகளை பக்கசார்பின்றி ஏற்ற முறையாக ஆராய்ந்து அமுல்படுத்தியிருந்தால் இக்கொலைகளைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் கொலைகள் நடப்பது நிறுத்தப்படவேண்டும் இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் சொன்னார். 47

# கருணாநிதி ஊழல் விசாரணைக்கு

தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியும் அவரது குடும்பத்தினரும் புரிந்ததாக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க தமிழக அரசு தனிநபர் விசாரணைக்கமிஷன் அமைத்துள்ளது.

நேற்று முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விசாரணை கமிஷன் அமைக்கும் திட்டம் எடுக்கப்பட்டது.

தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கருணாநிதி மீது ஊழல், லஞ்சம், பாரபட்சம், புலிகளுக்கு சலுகைவழங்கியது போன்ற பல குற்றச்சாட்டுகளை சுமத்தி பிரதமர் நரசிம்மராவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தார். இம்மகஜரை பிரதமர் தமிழக அரசிடம் அனுப்பி உண்மை நிலைவரத்தை அறிந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டிருந்தார்,

தமிழக பொலிஸ் செய்த பூர்வாங்க விசாரணையின் போது சில குற்றச்சாட்டுகள் உண்மை என தெரியவந்ததாம். இதையடுத்தே விசாரணைக்கமிஷன் ஒன்றை முன்னாள் தமிழக நீதிபதி சிவசுப்பிரமணியம் தலைமையில் அமைக்க தமிழக அரசு முடிவு செய்தது. கமிஷன் 6 மாத காலத்தினுள் தனது விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கும்.

விசாரணையின் போது வேறு ஏதாவது ஊழல் அறியப்பட்டால் அதை விசாரிக்கவும் இக்கமிஷனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கருணாநிதியின் மகன் செல்வம் மருமகன் ஆகியோருக்கு ஏற்றுமதியில் சலுகை.

மருத்துவக் கல்லூரி மாணவர் அனுமதியில் திருமதி கருணாநிதி மூலம் 40 லட்சம் வசூலிப்பு, மகன் மூலம் ஹோட்டல் உரிமையாளர்களிடமிருந்து 75 லட்சம் ரூபா பிரபல நடிகர் டி. இராஜேந்தர் மனைவி வீட்டை இடிப்பதில் மகள் ஸராவின் தீவிரமாக இருந்தமை ஒரு ஏற்றுமதி நிறுவனத்தை இடித்தமை போன்ற குற்றச்சாட்டுகள் கருணாநிதி மீது அவர் குடும்பத்தினர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

## புதிய கடற்படை தளபதி

வடபகுதியின் கடற்படை தளபதியாக கொமடோர் சிசேரா என்பவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். செப்டம்பர் மாதம் முதல் டி. கே. தசநாயக்கா என்பவர் நிரந்தர வடபகுதி கடற்படை தளபதியாக நியமிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய இராணுவ அதிகாரிகள் நியமனம் குறித்த செய்தி உள்ளே,

---

**மட்டக்களப்பு...**

கவே இந்த கொலையை இராணுவம் நடத்தியதாக கூறப்படுகிறது.

---

**கனத்தை...**

அதே சமயம் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெற்ற அதிகாரிகளின் மரணச்சடங்குகளில் எவ்வித குழப்பநடவடிக்கையும் இடம்பெறவில்லை என அமைச்சர் ரணில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் குழப்பநிலையை ஏற்படுத்தவே இந்த வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன

நேற்று முன்தினம் நடைபெற்ற வன்முறைகள் தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர் தனியார் மயமாக்கப்பட்ட போக்குவரத்துசபைக்கு சொந்தமான 4 பஸ்கள் சில தனியார் மினிபஸ்கள் பொலிஸ் வாகனங்கள் நேற்று முன்தினம் சேதமானதாகவும் குறிப்பிட்டார்.

---

**பாதுகாப்பு ..**

என மக்கள் சந்தேகிக்கின்றனர்.

டென்சில் கொப்பேகடுவ முதலில் ஜெயவர்த்தன வைத்தியசாலைக்கும் பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளார் அவருக்கு நான்கு மணித்தியாலங்களின் பின்பே சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது

காயமடைந்த படையினருக்கு சிகிச்சையளிக்க அனுராதபுர வைத்தியசாலை தயார் நிலையில் ஏன் வைக்கப்படவில்லையென மக்கள் கேள்வி யெழுப்புவதாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறினர்

எச். ஆர் ஜோதிபால மற்றும் சோமலி ஆகிய கலைஞர்களின் மரணச் சடங்குகளில் அரசு காட்டிய அக்கறை டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோரது மரணச்சடங்குகளிலும் காட்டியிருந்தால் மக்கள் இப்படி கோபமடைந்திருக்கமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்,

தமது சாதாரண அதிருப்தியை தெரிவிக்கும் மக்களை அடக்க கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசுவது புத்திசாலித்தனமானதா என்பதற்கு அரசே பதிலளிக்க வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறினார்,

# ஜனாதிபதியின் நிலையினால் தீர்விற்கானகாலம் கடந்துவிடலாம்
## பி. பி. ஸி. கருத்து

இராணுவ நடவடிக்கை மூலம் இறுதி வெற்றி என மீண்டும் மீண்டும் அரசு அறிவித்துவந்த நிலையில் வடக்கு இராணுவ பீடம் முற்றாக துடைத்தெறியப்பட்ட செய்தி சிங்கள மக்களை எட்டியது இது அவர்களை அரசுக்கெதிராக ஆவேசம் அடைய வைத்தது

இவ்வாறு பி பி ஸி தனது செய்தி கண்ணோட்டத்தில் குறிப்பிட்டது தமிழ் மக்கள் மீது இராணுவ நடவடிக்கையா அல்லது தன்னாட்சி உரிமை வழங்கும் முயற்சியையா ஜனாதிபதி இனி மேற்கொள்வார் என எதிர் பார்க்கப்படுகிறது

கடந்த ஒரு வருடமாக ஜனாதிபதி பிரேமதாஸ இவ்விரு விடயத்திலும் மழுப்பிய படிக்கபடியே இருந்துவந்தார் ஆனால் இனி காலம் கடந்து விடக்கூட நேரிடலாம் என பி பி ஸி சுட்டிக்காட்டியது.

---

**புலிகள்...**

இத்தமனுவை கௌரம் என்பவர் தன்னை புலிகள் அமைப்பின் அருகதுள்ள நண்பன் என குறிப்பிட்டு நீதிபதி முன் மனுவை சமர்ப்பித்தார்.

அப்போது நீதிபதி நாம், பிரதிவாதிகளின் வழக்குரைஞர் என்ற அத்தகைய இல்லாத அந்தஸ்துள்ள என்ற முறையில் சட்ட நடவடிக்கையில் பங்குபற்ற முடியாதே என்றார்.

எனினும் மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டு விசாரணையை எதிர் வரும் 25 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்

இந்த வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் வெளிநாட்டில் வசிப்பவர்கள் என்பதால் அவர்கள் முறைப்பாக எதிர் மனு அளிக்க கால அவகாசம் தரும் வண்ணம் விசாரணையை 6 வாரம் ஒத்தி வைக்கும்படி முன்னதாகவேண்டுகோள் விடுக்கப்பட்டது.

புலிகள் மீது தடாசட்டம் அமுல்படுத்தப்படவில்லை சட்டவிரோத தடுப்பு சட்டம் என்ற தீவிரமற்ற சட்டம் மூலமே புலிகள் தடைசெய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக புலிகள் ஒரு போதும் செயற்படவில்லை தமிழரின் சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதம் ஏந்தி இலங்கையில் போராடுவதே புலிகளின் குறிக்கோள் 1985 திம்பு பேச்சின்போதும் 1987 இலங்கை - இந்திய பேச்சுகளின் போதும் இந்தியா புலிகளின் ஆயுதப்போராட்டத்தை அங்கீகரித்திருந்தது எனவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகமே இவ்வழக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது நீதித்துறையின் நம்பகத்தன்மை சோதனைக்குள்ளாகியுள்ளது விசாரணை செய்யாமல் யாரையும் குற்றவாளி என முடிவு கட்டக்கூடாது என இதுகொடர்பாக கருத்து வெளியிட்ட மனுவை தாக்கல் செய்த கௌரம் குறிப்பிட்டார்

முன்னதாக இவ்வழக்கில் புலிகள் சார்பில் வாதாட இந்தியாவின் பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலனி கேட்கப்பட்டதாகவும் அவர் இதற்கு மறுத்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கல்வியங்காடு யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 14 08- 92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது